செ.வெ.எண்: 321 நாள்:17.05.2018

# திருநெல்வேலி மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளின் உயர் கல்வி சேர்கைக்கு சார்ந்தோர் சான்றுகள் இணைதளம் மூலம் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

----

முன்னாள் படைவீரர்கள் அறிவது 2018-19ம் கல்வி ஆண்டில் முன்னாள் படைவீரர்களின் +2 தேர்வு எழுதியுள்ள சிறார்களுக்கு B.E, B.Tech, டிப்ளமா மற்றும் கல்லூரி சேர்க்கைக்குரிய இடஒதுக்கீட்டிற்கான சார்ந்தோர் சான்றுகள் Online மூலம் வழங்கப்படவுள்ளதால் சார்ந்தோர் சான்று பெற்றிட விண்ணப்பிக்கும் முன்னாள் படைவீரரது தகவல் e-governance module-லில் Validatte செய்யப்படவேண்டும். எனவே e-governance module-லில் Validate செய்யாத சான்று பெற விருப்பமுள்ள முன்னாள் படைவீரர்கள் e-governance module-லில் Validatte செய்து சான்று பெறும் பொருட்டு கீழ்காணும் ஆவணங்களின் அசல் மற்றும் நகலுடன் திருநெல்வேலி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநரை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

1. முன்னாள் படைவீரரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் -1
2. படைவிலகல் சான்று (முபவீ).
3. ஓய்வூதிய ஒப்பளிப்பு ஆணை (PPO) (முபவீ)
4. வங்கி பாஸ் புத்தகம் முதல் பக்கம். (முபவீ)
5. ஆதார்கார்டு. (முபவீ)
6. சிறாரின் கல்வி மாற்றுச் சான்று-நகல்.
7. +2 மதிப்பெண் பட்டியல் -நகல்.
8. சாதிச் சான்று - நகல்.
9. குடும்ப உணவு பங்கீடு அட்டை - நகல்.

+2 தேர்வு முடிவு விவரம் அறிவிக்கை பெறப்படும் முன்னர் சார்ந்தோர் சான்று பெற விண்ணப்பிப்போர் தேர்வு முடிவு அறிவிக்கை பெறப்பட்ட பின்னர் மதிப்பெண் பட்டியல் நகல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும். மேலும் கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட சார்ந்தோர் சான்றிதழை பயன்படுத்தக்கூடாது எனவும் இந்த ஆண்டிற்கு விண்ணப்பிக்கும் போது புதிதாக சார்ந்தோர் சான்று பெற வேண்டும் எனவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தீப்நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.